# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 232/ந/2025, நாள் 03.11.2025**

A. முஹம்மத் ஜியாவுதீன்
மேல்விஷாரம், இராணிப்பேட்டை மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
மேல்விஷாரம் நகராட்சி, இராணிப்பேட்டை மாவட்டம். – எதிர்மனுதாரர்

இராணிப்பேட்டை மாவட்டம், மேல்விஷாரம், தண்டுக்கார் தெரு, எண்.23 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.A. முஹம்மத் ஜியாவுதீன் என்பவரின் 26.06.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.06.2025 அன்று பெறப்பட்டு, 232/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

இராணிப்பேட்டை மாவட்டம், மேல்விஷாரம், தண்டுக்கார் தெரு, எண்.23 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. முஹம்மத் ஜியாவுதீன் என்பவரின் 26.06.2025 நாளிட்ட மனுவுடன் பெறப்பட்ட 27.06.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"1. 20 தெருக்களுக்கு கருப்பு பகிர்மான குழாய் (Black Pipe) அமைப்பதற்கு 2635 மீட்டர் அளவிற்கு வந்துள்ளது. அதில் கிட்டதட்ட ஏற்கனவே 14 தெருக்களில் Finolex 3 Inch 4 Gauge Pipe line (அதன் விலை 1 மீட்டர் ரூ.113) போடப்பட்டது. ஆனால் நகராட்சியில் பணிபுரியும் Overseer கமலக்கண்ணன் மற்றும் ME சரவணன் ஆகியோர் சேர்ந்து ஒப்பந்ததாரரிடம் கருப்பு பழுப்பு போடப்பட்டது என்றும் 1 மீட்டர் ரூ.113 என்பதை மாற்றி 1 மீட்டர் ரூ.749 என்று பொய்யான விலையை கூறி இருவரும் பங்கு போட்டு மக்கள் வரி பணத்தை ஊழல் செய்வதற்காக முயற்சி செய்கிறார்கள். அதை தடுத்து ரூ.19,75,000/– பணத்தை முறையான வழியில் செலவு செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

2. மேலும், 15$^{th}$ CFC 2023 – 2024 நிதி ஆண்டில் பாலாற்றங்கரையில் சுமார் 2400 மீட்டர் அளவிற்கு கேபிள்கள் பொருத்துவதற்கு ரூ.10,00,000 (பத்து லட்சம்) வந்துள்ளது. ஆனால் ஏற்கனவே, கேபிள்கள் போடப்பட்டதாக கணக்கு காட்டி Overseer கமலக்கண்ணன், ME சரவணன், மற்றும் ஒப்பந்ததாரர் (Sabari Constructions) ஆகிய மூவரும் சேர்ந்து மக்கள் வரி பணதை பங்கு போட்டு ஊழல் செய்ய முயற்ச்சிக்கிறார்கள். ஆனால் இதுவரை பாலாற்றில் இரண்டு கிணறுகளுக்கு கேபிள்கள் இல்லாததால் மேல்விஷாரம் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யமுடியாமல் மக்களுக்கு குடிநீருக்கான தட்டுப்பாடு அதிக அளவில் ஏற்படுகிறது. ஆகையால் முறையாக இரண்டு கிணறுகளுக்கும் கேபிள்கள்

அமைத்து மக்களுக்கு தட்டுபாடின்றி குடிநீர் கிடைத்திட வழிவகை செய்திடுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

3. 15$^{th}$ CFC 2023 – 2024 ஆம் ஆண்டிற்கான நிதி நகராட்சிக்குட்பட்ட வார்டு 11–ல் அமைந்துள்ள கையூம் நகர் 1–வது மற்றும் 2–வது தெரு, ஹாஜிப்பேட்டை 2வது குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைப்பதற்கு ரூ.11,94,000/– மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டு நியா எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனம் இந்த ஒப்பந்தப்புள்ளியை பெற்றது. கடந்த ஆண்டு வார்டு 11–ல் கையூம் 1–வது தெரு மற்றும் 2–வது தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டது. தற்போது அமைக்கப்பட்ட சாலையும் தரமற்ற சாலையாக உள்ளது. பணி முடிந்த சாலைக்கு தற்போது வந்துள்ள 15th CFC 2023 – 2024 ஆம் ஆண்டிற்கான திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. போனவருடம் போடப்பட்ட சாலைக்கு தற்போது போடப்பட்டதாக கணக்கு காட்டி Overseer கமலக்கண்ணன் ME சரவணன் மற்றும் ஒப்பந்ததாரர் (Niya Enterprises) ஆகிய மூவரும் சேர்ந்து மக்கள் வரி பணத்தை பங்கு போட்டு ஊழல் செய்ய முயற்சிக்கிறார்கள். இதனை நேரில் சென்று ஆய்வு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

போடப்பட்ட சாலை முக்கால் ஜல்லியில் போடப்பட்டது. ஆனால் மற்ற Scheme-ல் சாலைக்கு ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையை விட 15 CFC திட்டத்தில் சாலை மதிப்பீட்டு தொகை அதிகமாக உள்ளது. ஆனால் போடப்பட்ட சாலை தரமற்ற சாலையாக உள்ளது. இதில் கண்டிப்பாக முறைகேடு உள்ளதால் விசாரணை செய்யும்படி தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் குறித்து மேல்விஷாரம் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 04.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. மேல்விஷாரம் நகராட்சி ஆணையர் தனது 23.07.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

"1. Providing 90 mm dia HDPE PIPE in Melvisharam Municipality. Estimate Ámount Rs.19.75 Lakhs

மேல்விஷாரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 90mm HDPE குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணிகளை ரூ.19.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 15th CFC 2023 - 2024 ஆம் ஆண்டு (Tied Grant) திட்டத்தின் கீழ் 20.02.2025–ந் தேதியன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு, இப்பணிக்கு 17.03.2025–ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் M/s வெற்றி கன்ஸ்டரக்ஷன்ஸ் என்பவர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துக் கொண்டதின் பேரில் இவருக்கு 26.03.2025–ல் மேற்படி பணிக்கான பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் ஒப்பந்ததாரர் இது நாள் வரையில் பணி தொடங்காமல் இருந்து வருகிறார். ஒப்பந்ததாரருக்கு 15.07.2025–ல் பணிகளை தொடங்க நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதே நிலை நீடித்தால் ஒப்பந்ததாரரின் மீது நிர்வாக ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

2. Supply and Laying of 50 sq mm cable -1300m at Well no: 05, 06 at Eswarn Koil Headworks in Melvisharam Municipality. Estimate Amount Rs.10.00 Lakhs

மேற்படி, இதே 15$^{th}$ CFC 2023-2024 – ஆம் ஆண்டு (Tied Grant) திட்டத்தின் கீழ் 50 sq mm UG cable சப்ளை மற்றும் பதித்தல் பணிக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 20.02.2025–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 17.03.2025–ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்ததன் பேரில் 26.03.2025–ல் மேற்படி பணிக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி, பணிக்கான 1200 மீட்டர் 50 sq mm UG cable 15.07.2025–ந் தேதியன்று ஒப்பந்ததாரரால் சப்ளை செய்யப்பட்டுள்ளது. கேபிள்கள் சப்ளை செய்யப்பட்டதற்கான GPS புகைப்பட நகல் இணைக்கப்பட்டுள்ளது. கேபிள் பதிக்கும் பணி நடை பெறவுள்ளது.

3. Providing Cement Concrete Pavement at Khyoom Nagar 1$^{st}$ Main Road 3$^{rd}$ Cross Khyoom Nagar 1$^{st}$ Main Road 4$^{th}$ Cross, Hajipet 1$^{st}$ Cross Road in ward no: 11 & 19 in Mellisharam Municipality. Estimate Amount Rs.11.96 Lakhs

15th CFC 2023-2024-ஆம் ஆண்டு (Untied Grant) திட்டத்தின் கீழ் வார்டு எண்.11–ல் கையூம் நகர் 1, 2–வது தெருக்கள் மற்றும் ஹாஜிபேட்டை 2–வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ.11.96 இலட்சம் மதிப்பீட்டில் 20.02.2025–ந் தேதியன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிகளுக்கு 17.03.2025–ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் M/s நியா எண்டர் பிரைசஸ் என்ற நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்ததின் பேரில் 26.03.2025–ல் மேற்படி பணிக்கான பணி உத்தரவு வழங்கப்பட்டது. அதில் கையூம் நகர் 1–வது மற்றும் 2–வது தெருக்கள் கடந்த ஆண்டு கடும் மழையின் காரணமாக சாலை மிகவும் சேதமடைந்து இருந்ததால் அத்தெருக்களில் பொது மக்கள் செல்ல முடியாத நிலையில் இருந்ததால் இந்த இடத்தை நகர்மன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் நேராய்வு செய்து மேற்படி இரண்டு தெருக்களுக்கும் சிமெண்ட் சாலைகள் உடனடியாக அமைத்து தரலாம் என்றும் இந்த சிமெண்ட் சாலைகளுக்கு உண்டான தொகையை வரும் திட்டபணிகளில் ஈடு செய்து கொள்ள நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் எண்.546 மற்றும் 547, நாள்.02.12.2024–ல் அனுமதிக்கப்பட்டதன் பேரில் பொதுமக்கள் நலன் கருதி சாலையை அமைத்து தரப்பட்டது. இந்த சாலை பொதுமக்கள், நகராட்சி பொறியியல் பிரிவு அலுவலர்கள் மற்றும் தலைவர் முன்னிலையில் தரமான சாலை அமைக்கப்பட்டுள்ளது. கையூம் நகர் 1–வது மற்றும் 2–வது தெருக்களில் நகர்மன்ற அனுமதியுடன் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டது.

மேற்கண்ட மூன்று பணிகளிலும் மனுதாரர் தெரிவித்துள்ளது போல் முறைகேடு எதுவும் நடைபெறவில்லை. மேலும் சம்மந்தப்பட்ட நகர்மன்ற உறுப்பினர் திரு. ஜியாவுதீன் அவர்கள் ஒப்பந்ததாரரிடம் உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக புகார் கடிதம் கொடுத்துள்ளார். இதில் உண்மை தன்மை இல்லை என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். " எனத் தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மேல்விஷாரம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 20.08.2025 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ளுமாறு 08.08.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. A. முஹம்மத் ஜியாவுதீன் என்பவர் 20.08.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மேல்விஷாரம் நகராட்சியில் குடிநீர் விநியோகம் செய்ய கருப்பு பகிர்மான குழாய் (Black Pipe)-க்கு பதிலாக Finolex 3 inch 4 Gauge Pipe line (அதன் விலை 1m – Rs.113) போடப்பட்டுள்ளது. இதன் விலை ரூ.113/– ஆகும். மேற்படி Finolex Pipe-யை ரூ.113/–க்கு வாங்கிவிட்டு ரூ.745/–க்கு பைப் பதிக்கப்பட்டதாக தெரிவிக்கின்றனர்.

15வது CFC, 2023-24 ஆம் ஆண்டிற்கான நிதி நகராட்சிக்குட்பட்ட வார்டு 11–ல் அமைந்துள்ள கையூம் நகர் 1வது மற்றும் 2வது தெரு, ஹாஜிப்பேட்டை 2வது குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைப்பதற்கு ரூ.11,94,000/– மதீப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டு நியா எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனம் இந்த ஒப்பந்தபுள்ளியை பெற்றது. ஒரு வருடத்திற்கு முன்பு போடப்பட்ட சாலையினை தற்போது போடப்பட்ட சாலை எனக் கணக்கு காட்டி மக்கள் வரி பணத்தை பங்கு போட்டு ஊழல் செய்ய முயற்ச்சிக்கிறார்கள். இதனை ஆய்வு செய்து உரிய நீதி கிடைத்திட ஆவணச் செய்யுமாறு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

பாலாற்றில் உள்ள இரண்டு கிணறுகளுக்கு கேபிள்கள் இல்லாததால் மேல்விஷாரம் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யமுடியாமல் மக்களுக்கு குடிநீருக்கான தட்டுப்பாடு அதிக அளவில் ஏற்படுகிறது. ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு கேபிள் பதிக்கப்பட்டதாக தவறான தகவல்கள் தெரிவித்துள்ளனர். ஆகையால் முறையாக இரண்டு கிணறுகளுக்கும் கேபிள்கள் அமைத்து மக்களுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் கிடைத்திட வழிவகை செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுமக்களின் வரிப்பணத்தில் ஊழல் செய்து நகராட்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேற்கண்ட குற்றச்சாட்டுக்களை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கள ஆய்வு செய்து குற்றச்சாட்டுக்கள் உறுதி செய்யப்பட்டு மேல்விஷாரம் நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை

டுக்க தெரிவித்துள்ளார் என்பதற்கான ஆதாரத்தினை தங்கள் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கின்றேன். " எனத் தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான மேல்விஷாரம் நகராட்சி ஆணையர் திரு. G. பழனி மற்றும் நகராட்சி பொறியாளர் திரு. B.K.சரவணன் ஆகியோர் 20.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

"மேல்விஷாரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 90mm HDPE குடிநீர்பகிர்மான குழாய் பதிக்கும் பணிகளை மேற்கொள்ள ரூ.19.75 இலட்சம் மதிப்பீட்டில் 15வது CFC 2023–24ஆம் ஆண்டு (Tied Grant) திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் M/s. வெற்றி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துக் கொண்டதன்பேரில் மேற்படி பணிக்கான பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஒப்பந்ததாரர் இதுநாள் வரையில் பணி தொடங்காமல் இருந்ததால், 15.07.2025–ல் பணிகளை தொடங்க ஒப்பந்ததாரருக்கு நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டு, இதே நிலை நீடித்தால் ஒப்பந்ததாரரின் மீது நிர்வாக ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டில் வெள்ளை நிற PVC பைப் பயன்படுத்தப்பட்டதாக கூறி உள்ளார். ஆனால் கருப்பு நிற தரமான HDPE கருப்பு நிற பைப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. உபயோகப்படுத்திய பைப்புக்கான தொகையினைத் தவிர்த்து மீதி தொகை அரசுக்கு ஒப்படைக்கப்படும்.

15-வது CFC 2023-24 ஆம் ஆண்டு (Untied Grant) திட்டத்தின் கீழ் வார்டு எண்.11–ல் கையூம் நகர் 1, 2வது தெருக்கள் மற்றும் ஹாஜிப்பேட்டை 2வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ.11.96 இலட்சம் மதிப்பீட்டில் 20.02.2025–ந் தேதியன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s. நியா எண்டர் பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. பொதுமக்கள் நலன் கருதி நகராட்சி பொறியியல் பிரிவு அலுவலர்கள் மற்றும் தலைவர் முன்னிலையில் கையூம் நகர் 1–வது மற்றும் 2–வது தெருக்களில் நகர்மன்ற அனுமதியுடன் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டது.

15–வது CFC 2023–24ஆம் ஆண்டு (Tied Grant) திட்டத்தின் கீழ் 50 sq mm UG cable சப்ளை மற்றும் பதித்தல் பணிக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 20.02.2025–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 14.03.2025–ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்ததன் பேரில் ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. 1200 மீட்டர் 50sqmm UG cable 15.07.2025-ஆம் தேதியன்று ஒப்பந்ததாரரால் சப்ளை செய்யப்பட்டு கேபிள் பதிக்கும் பணி நடைபெறவுள்ளது.

மனுதாரர் தெரிவித்துள்ளது போல் முறைகேடு ஏதுவும் நடைபெறவில்லை. மேலும் சம்மந்தப்பட்ட நகர்மன்ற உறுப்பினர் திரு. ஜியாவுத்தீன் அவர்கள் அளித்துள்ள புகார் கடிதத்தில் உண்மை தன்மை இல்லை என்பதை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களின் கனிவான கவனத்திற்கு பணிவுடன் தெரிவித்து கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளனர்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரரான மேல்விஷாரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையர், நகாட்சி பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் இதர ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்தில் மேல்விஷாரம் நகராட்சியில் (1) கருப்பு பகிர்மான குழாய் (Black Pipe) அமைப்பதற்கு பதிலாக குறைந்த தொகையில் கருப்பு பழுப்பு போடப்பட்டுள்ளதாகவும் (2) பாலாற்றில் இரண்டு கிணறுகளுக்கு கேபிள்கள் இல்லாத நிலையில், ஏற்கனவே கேபிள்கள் போடப்பட்டதாக கணக்கு காட்ட முயற்சிப்பதாகவும், இரண்டு கிணறுகளுக்கும் கேபிள்கள் அமைத்து மக்களுக்கு தட்டுபாடின்றி குடிநீர் கிடைத்திட வழிவகை செய்யுமாறும், (3) மேல்விஷாரம் நகராட்சிக்குட்பட்ட

வார்டு 11–ல் அமைந்துள்ள கையூம் நகர் 1–வது மற்றும் 2–வது தெருக்களுக்கு ஏற்கனவே சிமெண்ட் சாலை அமைக்கப்பட்ட நிலையில் தற்போது அமைக்கப்பட்ட சாலையும் தரமற்றதாக உள்ளதாகவும், கடந்த வருடம் போடப்பட்ட சாலைக்கு தற்போது போடப்பட்டதாக கணக்கு காட்ட முயற்ச்சிப்பதாகவும், இதில் முறைகேடு நடந்திருப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டிருப்பது அறிய முடிகிறது.

மேல்விஷாரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 90mm HDPE குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணிகளை மேற்கொள்ள ரூ.19.75 இலட்சம் மதிப்பீட்டில் 2023–24ஆம் ஆண்டு Tied Grant திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s. வெற்றி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாகவும், குற்றச்சாட்டில் தெரிவித்துள்ள வெள்ளை நிற PVC பைப் பயன்படுத்தப்படவில்லை எனவும், கருப்பு நிற தரமான HDPE பைப்புகள் பயன்படுத்தப்பட்டதாகவும், உபயோகப்படுத்திய பைப்புக்கான தொகை போக மீதித் தொகை அரசுக்கு ஒப்படைக்கப்படும் என்ற விவரம் எதிர்மனுதாரரான மேல்விஷாரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மேலும், 2023-24 ஆம் ஆண்டு Untied Grant திட்டத்தின் கீழ் வார்டு எண்.11–ல் கையூம் நகர் 1, 2வது தெருக்கள் மற்றும் ஹாஜிப்பேட்டை 2வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s. நியா எண்டர் பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதாகவும், பொதுமக்கள் நலன் கருதி நகராட்சி பொறியியல் பிரிவு அலுவலர்கள் மற்றும் தலைவர் முன்னிலையில் கையூம் நகர் 1–வது மற்றும் 2–வது தெருக்களில் நகர்மன்ற அனுமதியுடன் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ள விவரமும் மேல்விஷாரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

மேலும், 2023–24ஆம் ஆண்டு Tied Grant திட்டத்தின் கீழ் 50sqmm UG cable சப்ளை மற்றும் பதித்தல் பணிக்கு 20.02.2025–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் நிறுவனத்தால் 1200 மீட்டர் 50sqmm UG cable 15.07.2025-ல் சப்ளை செய்யப்பட்டு கேபிள் பதிக்கும் பணி நடைபெறவுள்ளது என்ற விவரமும் மேல்விஷாரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

இந்நேர்வில்;

(1) மேல்விஷாரம் நகராட்சியில் குடிநீர் விநியோகம் செய்ய கருப்பு பகிர்மான குழாய் (Black Pipe)-க்கு பதிலாக Finolex 3 inch 4 Gauge pipe 1 மீட்டர் ரூ.113/–க்கு கொள்முதல் செய்து ரூ.745/–க்கு குழாய் பதிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் புகார் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி குடிநீர் பகிர்மான பைப் பதியப்பட்டதில் முறைகேடு நடைபெற்றுள்ளதா என்பது குறித்து வேலூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் தலைமையில் குழு அமைத்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(2) 15வது நிதிக்குழுவின் 2023-2024 – ஆம் ஆண்டு Tied Grant திட்டத்தின் கீழ் 50 sq mm UG cable சப்ளை மற்றும் பதித்தல் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, 1200 மீட்டர் 50 sq mm UG cable ஒப்பந்ததாரரால் சப்ளை செய்யப்பட்டு கேபிள் பதிக்கும் பணி நடைபெறவுள்ளது என எதிர்மனுதாரரான மேல்விஷாரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டவாறு பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பணியினை விதிமுறைகளை அனுசரித்து, துரிதப்படுத்தி குடிநீர் விநியோகிக்கும் பணியினை மேற்கொண்டிட மேல்விஷாரம் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(3) மேல்விஷாரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11, கையூம் நகர் 1 மற்றும் 2வது தெருக்கள் மற்றும் ஹாஜிப்பேட்டை 2வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ. 11.96 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு சிமெண்ட் காலைகள் போடப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரரான மேல்விஷாரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் கடந்த ஆண்டு போடப்பட்ட சிமெண்ட் சாலையினை தற்போது போடப்பட்டுள்ளதாக கணக்குகாட்டி தொகை பெற முயற்சிப்பதாக தெரிவித்திருப்பதால், இது குறித்து வேலூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் தலைமையில் குழு அமைத்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 03 –ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. A. முஹம்மத் ஜியாவுதீன்,
எண்.23,தண்டுக்கார் தெரு,
மேல்விஷாரம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
மேல்விஷாரம் நகராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

7/11/25
செயலாளர்

7/11/25

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032